16,549 சிறப்பு ஆசிரியர்கள் நியமனம்:

# மாவட்ட வாரியாக காலி இடங்கள் முழு விவரம்

## அரசு அறிவிப்பு

சென்னை, நவ.24-

அரசு பள்ளிக்கூடங்களில் 16,549 பகுதிநேர சிறப்பு ஆசிரியர்கள் நியமிக்கப்பட உள்ளனர். இதற்கு மாவட்ட வாரியான காலி இடங்களை அரசு அறிவித்துள்ளது. அதிகபட்சமாக விழுப்புரம் மாவட்டத்தில் 1,221 காலி இடங்களும், குறைந்தபட்சமாக தூத்துக்குடி மாவட்டத்தில் 126 காலி பணி இடங்களும் உள்ளன.

### 16,549 சிறப்பு ஆசிரியர்கள்

அரசு நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 6-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை 16,549 சிறப்பு ஆசிரியர்களை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. ஓவியம், தையல், இசை, வாழ்க்கைக்கல்வி, கம்ப்யூட்டர் அப்ளிகேஷன், கட்டிட வேலை, உடற்கல்வி ஆகிய பாடப்பிரிவுகளில் நியமிக்கப்பட இருக்கும் இந்த சிறப்பு ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.5 ஆயிரம் சம்பளம் வழங்கப்படும். [illegible]

மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி, மாவட்ட தொடக்கக்கல்வி அதிகாரி, மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி (அனைவருக்கும் கல்வி இயக்கம்), சம்பந்தப்பட்ட பாடப்பிரிவு மாவட்ட அதிகாரி ஆகியோர் அடங்கிய தேர்வுக்குழு தகுதி உள்ளவர்களை நேர்முகத்தேர்வு மூலம் தேர்வு செய்யும். பணிக்கு தேர்வுசெய்யப்படும் ஆசிரியர்களுக்கு வாரத்திற்கு 3 நாட்கள் வேலை. தினமும் காலை அல்லது மதியம் 3 மணி நேரம் வகுப்பு எடுக்க வேண்டும்.

### மாவட்ட வாரியாக காலி இடங்கள்

இந்த நிலையில், சிறப்பு ஆசிரியர் பணியிடங்களுக்கு மாவட்ட வாரியான காலி இடங்களை அரசு அறிவித்துள்ளது. ஓவிய ஆசிரியர் பணிக்கு 5,253 இடங்களும் [illegible]

## மாவட்ட வாரியாக காலி பணியிடங்கள் விவரம்

| வரிசை எண் | மாவட்டம் | ஓவியம் | உடற் கல்வி | தொழிற் கல்வி |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | 105 | 104 | 117 |
| 2 | கோவை | 385 | 385 | 394 |
| 3 | கடலூர் | 227 | 228 | 251 |
| 4 | தர்மபுரி | 162 | 179 | 194 |
| 5 | திண்டுக்கல் | 154 | 164 | 172 |
| 6 | ஈரோடு | 212 | 204 | 231 |
| 7 | காஞ்சிபுரம் | 250 | 252 | 274 |
| 8 | கன்னியாகுமரி | 89 | 95 | 99 |
| 9 | கரூர் | 96 | 98 | 104 |
| 10 | கிருஷ்ணகிரி | 195 | 208 | 224 |
| 11 | மதுரை | 159 | 167 | 181 |
| 12 | நாகப்பட்டினம் | 178 | 181 | 188 |
| 13 | நாமக்கல் | 128 | 132 | 148 |
| 14 | பெரம்பலூர் | 151 | 163 | 172 |
| 15 | புதுக்கோட்டை | 168 | 182 | 189 |
| 16 | ராமநாதபுரம் | 87 | 86 | 94 |
| 17 | சேலம் | 220 | 209 | 336 |
| 18 | சிவகங்கை | 85 | 85 | 95 |
| 19 | தஞ்சாவூர் | 155 | 158 | 209 |
| 20 | தேனி | 89 | 90 | 95 |
| 21 | நீலகிரி | 46 | 45 | 54 |
| 22 | திருச்சி | 185 | 185 | 194 |
| 23 | திருநெல்வேலி | 127 | 130 | 138 |
| 24 | திருவள்ளூர் | 268 | 268 | 273 |
| 25 | திருவண்ணாமலை | 308 | 315 | 321 |
| 26 | திருவாரூர் | 136 | 142 | 155 |
| 27 | தூத்துக்குடி | 30 | 41 | 55 |
| 28 | வேலூர் | 335 | 358 | 400 |
| 29 | விழுப்புரம் | 402 | 405 | 414 |
| 30 | விருதுநகர் | 116 | 122 | 133 |
| | மொத்தம் | 5253 | 5392 | 5904 |

கோவையில் 394 காலி இடங்களும், சேலத்தில் 336 இடங்களும் உள்ளன. வட மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி போன்ற தென்மாவட்டங்களில் காலி இடங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. தென் மாவட்டங்களில் அரசு பள்ளிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பது இதற்கு காரணம் ஆகும்.

மொத்தம் அறிவிக்கப்பட்டுள்ள 16,549 சிறப்பு ஆசிரியர் பணி இடங்களில் விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 1,221 காலி இடங்கள் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு அடுத்தபடியாக கோவை மாவட்டத்தில் 1,164 இடங்களும், வேலூர் மாவட்டத்தில் 1,093 இடங்களும் உள்ளன.

Scanned by CamScanner

தையல். ஓவியம். உடற்பயிற்சி போன்றவற்றுக்கு

# ₹5 ஆயிரம் ஊதியத்தில் தற்காலிக பகுதிநேர சிறப்பாசிரியர்கள் நியமனம்

## தமிழக அரசு உத்தரவு

வேலூர், நவ.24: மாநிலம் முழுவதும் அரசு பள்ளிகளில் ஓவியம், தையல், உடற்பயிற்சி உள்ளிட்டவற்றுக்கு தற்காலிகமாக 16,549 சிறப்பாசிரியர்களை நியமிக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் உள்ள அரசு உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் சிறப்பாசிரியர்கள் உள்பட 5.5 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று தமிழக சட்டமன்றத்தில் முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருந்தார். அதன்படி தற்போது, மாநிலம் முழுவதும் வேலைவாய்ப்பு அலுவலக பதிவுமூப்பு அடிப்படையில் இடைநிலை ஆசிரியர்கள, பட்டதாரி, முதுநிலை பட்டதாரி, சிறுபான்மை மொழி, உடற்கல்வி, ஓவியம், தையல் போன்றவற்றுக்கான சிறப்பாசிரியர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், அனைவருக்கும் கல்வி இயக்க திட்டத்தின் கீழ் அரசு பள்ளிக்கூடங்களில் 6 முதல் 8ம் வகுப்பு வரை 16,549 பகுதி நேர சிறப்பாசிரியர்களை நியமிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இதில் 5,253 ஓவிய ஆசிரியர்களும், 5,392 உடற்கல்வி ஆசிரியர்களும், 5,904 இசை, தையல், தோட்டக்கலை, வாழ்க்கை கல்வி, கம்ப்யூட்டர், கட்டிடப்பணி போன்ற தொழிற்கல்வி ஆசிரியர்களும் நியமிக்கப்படுகின்றனர்.

இதற்காக மாவட்ட முதன்மை கல்வி அலுவலரை தலைவராகவும், அனைவருக்கும் கல்வி இயக்க திட்ட முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர், குறிப்பிட்ட பாட ஆசிரியர்களை தேர்வு செய்யும் வகையில் அத்துறை தொடர்பான அலுவலர் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட தேர்வுக்குழு அமைக்கப்படுகிறது. உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி சிறப்பாசிரியர் நியமனத்தை பொறுத்தவரை முதன்மை கல்வி அலுவலரும், நடுநிலைப்பள்ளிகளுக்கு மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலரும் நியமன அதிகாரியாக செயல்படுவர். சிறப்பாசிரியர் நியமனம் தொடர்பாக ஊடகங்களில் முறையான அறிவிப்பை வெளியிட்டு அதன் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட வேண்டும்.

நேர்முக தேர்வு மூலம் நியமிக்கப்படும் பகுதி நேர சிறப்பாசிரியர்களுக்கு மாதம் ரூ.5 ஆயிரம் ஊதியமாக வழங்கப்படும். பணி நியமனத்தில் குறிப்பிட்ட பாடப்பிரிவில் உயர்கல்வி தகுதி படைத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சமமான தகுதிகள் இருப்பின் உள்ளூர் விண்ணப்பதாரர்கள் மற்றும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பணி நியமனத்தின்போது 10 சதவீத விண்ணப்பதாரர்கள் காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்படுவர். இந்த பட்டியல் ஓராண்டு அல்லது அடுத்த தேர்வு இதில் எது முதலில் வருகிறதோ அதுவரை செல்லத்தக்கதாகும்.

நேர்முகத்தேர்வில் தேர்வு செய்யப்படுவோர் பட்டியல் மாவட்ட முதன்மை கல்வி அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டப்படும். அதேபோல் பள்ளிக்கல்வித்துறை இணையதளத்திலும் வெளியிடப்படும். இப்பணி நியமனம் தற்காலிக அடிப்படையிலானது. அனைவருக்கும் கல்வி இயக்கம் திட்டம் நடைமுறையில் உள்ளவரை இது நடைமுறையில் இருக்கும். சிறப்பாசிரியர் பணி எந்தவித முன்னறிவிப்பும் இன்றி நீக்கப்படும். நியமனம் பெற்றவர்களுக்கு சனி, ஞாயிறு தவிர வேறு எந்த விடுமுறையும் கணக்கில் கொள்ளப்படாது.

பணிக்காலத்தில் ஊதிய உயர்வு என்பதும் இல்லை. வாரத்தில் 9 மணி நேரம் கண்டிப்பாக பணி செய்ய வேண்டும். வாரத்தில் 3 நாட்கள் அரை நாட்கள் வேலை செய்ய வேண்டும். பணி கால அட்டவணை என்பது தலைமை ஆசிரியர்களின் அறிவுரைப்படி காலை 9.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரையோ அல்லது பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரையோ இருக்கும். இதுகுறித்து முறையாக தலைமை ஆசிரியர்கள் மூலம் முன்கூட்டியே சிறப்பாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படும்.

சிறப்பாசிரியர்கள் தேர்வு காலத்தில் பள்ளிக்கு செல்லும் அவசியமில்லை. அவ்வாறு செல்லாத நாட்களை காலாண்டு, அரையாண்டு, ஆண்டு விடுமுறை நாட்களில் வகுப்புகள் வைத்து ஈடுசெய்து கொள்ள வேண்டும். சிறப்பாசிரியர்களுக்கான வருகைப்பதிவேடு பள்ளிகளில் பராமரிக்கப்படும்.

அவர்களுக்கான ஊதியம் அந்தந்த கிராம கல்விக்குழு மூலம் வழங்கப்படும். பணி காலத்தில் பள்ளிக்கு வராத நாட்களுக்கான ஊதியம் கழிக்கப்படும். அத்துடன், பணி நியமனம் பெறும் பள்ளிகள் தவிர ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படும் பள்ளிகளுக்கு சென்று சேவையாற்ற வேண்டும். இவ்வாறு ஒரு சிறப்பாசிரியர் 4 பள்ளிகளுக்கு பயன்படுத்திக் கொள்ளப்படுவார். அதற்கேற்ப அந்தந்த பள்ளிகளில் அவர்களுக்கு தனித்தனியே ஊதியம் கணக்கிட்டு வழங்கப்படும்.

இதற்கான உத்தரவை பள்ளிக்கல்வித்துறை கூடுதல் செயலாளர் டி.என். ஸ்ரீதர் பிறப்பித்துள்ளார்.

www.tnagro.in

TAMILNADU AGRO TRAINING CENTRE
An ISO 9001:2008 Certified Training Centre
108, Sholinghur Road,
PALLIPAT-631207
Tiruvallur Dist., (T.N.)

Scanned by CamScanner

தினத்தந்தி 13 JAN 2012 13 JAN 2012

அரசு பள்ளிக்கூடங்களில் 16,549 காலி பணி இடங்களுக்கான

# பகுதி நேர சிறப்பு ஆசிரியர்களுக்கு 31-ந்தேதிக்குள் பணி நியமன ஆணை

## பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் வேலையில் சேர உத்தரவு

சென்னை, ஜன.13-

அரசு பள்ளிக்கூடங்களில் புதிதாக நியமிக்கப்பட உள்ள 16,549 பகுதி நேர சிறப்பு ஆசிரியர்களுக்கு 31-ந் தேதிக்குள் பணி நியமன ஆணை வழங்க வேண்டும் என்று அனைவருக்கும் கல்வி திட்ட இயக்குனர் முகமது அஸ்லாம் உத்தரவிட்டுள்ளார். பணிநியமன ஆணை பெற்ற சிறப்பு ஆசிரியர்கள் பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் வேலையில் சேர வேண்டும்.

### 16,549 காலி இடங்கள்

தமிழகம் முழுவதும் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் (எஸ்.எஸ்.ஏ.) கீழ் அரசு பள்ளிக்கூடங்களில் 6-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்காக 16,549 பகுதிநேர சிறப்பு ஆசிரியர்கள் நியமிக்கப்பட உள்ளனர். தையல், ஓவியம், இசை, உடற்கல்வி, கம்ப்யூட்டர் உள்பட பல்வேறு பாடங்களைச் சேர்ந்த இந்த ஆசிரியர்கள் வாரத்தில் 3 நாட்கள் (தினசரி 3 மணி நேரம்) பணியாற்ற வேண்டும். அவர்களுக்கு மாதம் ரூ.5 ஆயிரம் தொகுப்பூதியம் வழங்கப்படும்.

போதிய எண்ணிக்கையில் ஆசிரியர்கள் கிடைக்காத பட்சத்தில் அவர்களுக்கு அதிகபட்சம் 4 பள்ளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கு ஏற்ப கூடுதல் சம்பளம் வழங்கவும் அரசு முன்வந்துள்ளது. இதன்படி ஒரு ஆசிரியர் 2 பள்ளிக்கூடங்களில் வேலை பார்க்க நேரிட்டால் அவருக்கு ரூ.10 ஆயிரம் சம்பளம் கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

### தேர்வு பணி தீவிரம்

சிறப்பு ஆசிரியர்களை தேர்வு செய்யும் பணி தமிழகம் முழுவதும் மும்முரமாக நடந்து வருகிறது. இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி (பொது), கூடுதல் முதன்மை கல்வி அதிகாரி (எஸ்.எஸ்.ஏ.), மாவட்ட தொடக்கக்கல்வி அதிகாரி, சம்பந்தப்பட்ட பாடத்தில் மூத்த ஆசிரியர் ஆகியோர் அடங்கிய தேர்வுக்குழு அமைக்கப்பட்டு உள்ளது. இந்த குழுவினர் தகுதியுள்ள நபர்களிடம் விண்ணப்பங்களைப் பெற்று நேர்முகத்தேர்வுகளை நடத்தி வருகிறார்கள்.

விண்ணப்பித்த அனைவருக்குமே சான்றிதழ் சரிபார்ப்புக்கான அழைப்புக்கடிதங்கள் அனுப்பப்பட்டாலும் தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி (டி.டி.சி.) முடிக்காதவர்கள் சரிபார்ப்பின்போது நிராகரிக்கப்பட்டனர். தேர்வுமுறை மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசமாக இருந்தாலும், பெரும்பாலான மாவட்டங்களில் மாணவ-மாணவிகளின் கூடுதல் கல்வித்தகுதி, பணி அனுபவம், வேலைவாய்ப்பு பதிவுமூப்பு, இதர திறமைகள் போன்ற விவரங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒவ்வொன்றுக்கும் தனித்தனி மதிப்பெண் வழங்கப்பட்டது.

### பணி அனுபவ சான்றிதழ்

பணி அனுபவ விவரங்கள் கேட்கப்பட்டிருந்ததால் ஏராளமான மாணவ-மாணவிகள் தாங்கள் பாடம் சொல்லிக்கொடுத்த பள்ளியிடம் இருந்து அனுபவச் சான்று வாங்கி வந்திருந்தனர். எனினும் மெட்ரிக் பள்ளிகள் ஆய்வாளர் அல்லது உதவி தொடக்கக்கல்வி அதிகாரி அல்லது மாவட்ட தொடக்கக்கல்வி அதிகாரியிடம் சான்றொப்பம் (கவுண்டர்-சைன்) பெற்றுவராத பணி அனுபவச் சான்றுகளை தேர்வுக்குழுவினர் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த நிலையில், பகுதி நேர சிறப்பு ஆசிரியர் பதவிக்கு தேர்வு செய்யப்படுவோருக்கு இந்த மாத இறுதிக்குள் வேலைக்கான உத்தரவு வழங்க வேண்டும் என்றும், உத்தரவு பெற்ற ஆசிரியர்கள் அடுத்த மாதம் (பிப்ரவரி) முதல் வாரத்தில் பணியில் சேர்ந்துவிட வேண்டும் என்றும் அரசு உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து அனைவருக்கும் கல்வி திட்டத்தின் மாநில திட்ட இயக்குனர் முகமது அஸ்லாம் 'தினத்தந்தி' நிருபரிடம் தெரிவித்ததாவது:-

### சீனியாரிட்டி அடிப்படையிலா?

எஸ்.எஸ்.ஏ. திட்டத்தின் கீழ் அரசு பள்ளிக்கூடங்களுக்கு 16,549 பகுதி நேர சிறப்பு ஆசிரியர்களை தேர்வு செய்யும் பணி அனைத்து மாவட்டங்களிலும் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. ஆசிரியர்களை எந்த முறையில் தேர்வு செய்ய வேண்டும்? என்பது குறித்து மாவட்ட முதன்மை கல்வி அதிகாரிகளுக்கு ஏற்கனவே வழிகாட்டு நெறிமுறைகள் அனுப்பப்பட்டன. அதன் அடிப்படையில் சிறப்பு ஆசிரியர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.

இதற்கு பதிவுமூப்பு (சீனியாரிட்டி) மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. முன்கூட்டியே முடித்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். அவர்களின் கல்வித்தகுதி என்ன? மாணவர்களுக்கு எப்படி பாடம் எடுப்பார்கள்? என்னென்ன இதர திறமைகள் உள்ளன? போன்றவை எல்லாம் கணக்கில் கொள்ளப்படும்.

### 31-ந் தேதிக்குள் நியமன ஆணை

எவ்வித புகாருக்கும் இடம் தராத வகையில் ஆசிரியர்களை தேர்வு செய்ய வேண்டும் என்று மாவட்ட முதன்மை கல்வி அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எந்த மாவட்டத்திலாவது புகார்கள் வந்தால் சம்பந்தப்பட்ட மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சான்றிதழ் சரிபார்ப்பு, நேர்முகத்தேர்வு உள்ளிட்ட தேர்வு பணிகளை 15-ந் தேதிக்குள் முடித்துவிட்டு தகுதியான நபர்களை தேர்வு செய்து அவர்களுக்கு வருகிற 31-ந் தேதிக்குள் பணிநியமன ஆணை அனுப்பப்பட்டுவிட வேண்டும் என்று ஏற்கனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### பிப்ரவரி முதல் வாரத்தில் வேலை

பகுதி நேர சிறப்பு ஆசிரியர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்படுவோர் பிப்ரவரி முதல் வாரத்தில் பணியில் சேர்ந்துவிட வேண்டும். ஒரு ஆசிரியர் இரண்டு பள்ளிக்கூடங்களில் பணியாற்றும் சூழ்நிலை ஏற்பட்டால் அவருக்கு ஒரு பள்ளிக்கு ரூ.5 ஆயிரம் வீதம் இரண்டு பள்ளிகளுக்கு ரூ.10 ஆயிரம் சம்பளம் வழங்கப்படும்.

இவ்வாறு முகமது அஸ்லாம் கூறினார்.

TAMILNADU AGRO TRAINING CENTRE
An ISO 9001:2008 Certified Training Centre
108, Sholinghur Road,
PALLIPAT-631207
Tiruvallur Dist., (T.N.)

Scanned by CamScanner

TAMILNADU AGRO TRAINING CENTRE
An ISO 9001:2008 Certified Training Centre
108, Sholinghur Road,
PALLIPAT-631207
Tiruvallur Dist., (T.N.)

# சிறப்பாசிரியர் பணியிடங்களுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு பட்டியல் வெளியீடு

சென்னை, ஜூலை 28: தையல், ஓவியம், உடற்கல்வி உள்ளிட்ட சிறப்பாசிரியர் பணியிடங்களுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு பட்டியலை ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்டுள்ளது. மாவட்ட வாரியான சான்றிதழ் சரிபார்ப்பு ஆகஸ்ட் 13 -ஆம் தேதி நடைபெறும் எனவும் வாரியம் தெரிவித்துள்ளது.

அரசு பள்ளிகளில் தையல், ஓவியம், உடற்கல்வி, இசை ஆகிய பாடங்களில் சிறப்பாசிரியர் பதவியில் 1,325 காலியிடங்களை நிரப்பும் வகையில், கடந்த 2017 -ஆம் ஆண்டு செப்டம்பர் 23 -ஆம் தேதி போட்டித்தேர்வு நடத்தப்பட்டது.

ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்திய இந்தத் தேர்வை 35,781 பேர் எழுதினர். இந்த நிலையில், தேர்வெழுதிய அனைவரின் மதிப்பெண்களும் ஜூன் 14 -ஆம் தேதி ஆசிரியர் தேர்வு வாரியத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

இதையடுத்து சான்றிதழ் சரிபார்ப்பு பட்டியல் www.trb.tn.nic.in என்ற இணையதளத்தில் வெள்ளிக்கிழமை இரவு வெளியிட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து பணிநியமன அறிவிக்கையில் குறிப்பிட்டபடி, 'ஒரு காலியிடத்துக்கு 2 பேர்' என்ற விகிதாச்சார அடிப்படையில் சான்றிதழ் சரிபார்ப்புக்கு தேர்வர்கள் அழைக்கப்பட உள்ளனர்.

சான்றிதழ் சரிபார்ப்புப் பணி அனைத்து மாவட்டங்களிலும் ஆகஸ்ட் 13 -ஆம் தேதி நடைபெறும்.

சான்றிதழ் சரிபார்ப்பு முடிந்ததும் அடுத்த சில தினங்களில் பெயர், பதிவெண், எழுத்துத் தேர்வு மதிப் பெண், பதிவுமூப்பு மதிப்பெண், இடஒதுக்கீடு உள்ளிட்ட விவரங்களுடன் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும்.

அதைத்தொடர்ந்து, பணிக்கு தேர்வு செய்யப்பட்ட சிறப்பாசிரியர்களுக்கு பள்ளிக்கல்வித் துறை மூலம் ஆன்லைனில் கலந்தாய்வு நடத்தப்பட்டு பள்ளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்னர் பணிநியமன ஆணை வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

Scanned by CamScanner

# உடற்கல்வி, ஓவிய ஆசிரியர் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்

## கல்வித் துறை இயக்குநர்

விழுப்புரம், மார்ச் 29: தமிழகப் பள்ளிகளில் உடற்கல்வி, ஓவியம், இசை, தையல் ஆசிரியர் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்பட உள்ளதாக, பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் ச.கண்ணப்பன் தெரிவித்தார்.

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் காலியாக உள்ள 4,500 ஆய்வக உதவியாளர் பணியிடங்களுக்கு கடந்த 2015-ஆம் ஆண்டில் நடைபெற்ற எழுத்துத் தேர்வு முடிவுகள் அண்மையில் வெளியிடப்பட்டன. இப்பணியிடங்களை நிரப்புவதற்கான வழிமுறைகளை வகுத்து, கல்வித் துறை நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பாக, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம், விழுப்புரம் கல்வி அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில், பங்கேற்ற பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் ச.கண்ணப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஆய்வக உதவியாளர் பணியிடங்களை, அந்தந்த மாவட்டங்களில் காலிப் பணியிடங்களுக்கு தகுந்த வகையில், நேர்முகத் தேர்வு மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக, எழுத்துத் தேர்வில் தேர்வானவர்கள் குறித்த பட்டியல், ஏப்ரல் 1,2ஆம் தேதிகளில், அந்தந்த முதன்மைக் கல்வி அலுவலகங்களில் ஒட்டப்படும். உரியவர்களுக்கு அழைப்புக் கடிதமும் அனுப்பி வைக்கப்படும். காலியிடத்துக்கு தகுந்தாற் போல், 1:5 என்ற விகிதத்தில் அழைக்கப்படுவர். இதனையடுத்து, அந்தந்த முதன்மைக் கல்வி அலுவலகங்களில் ஏப்ரல் 9 முதல் 11-ஆம் தேதி வரை இவர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு நடைபெறும்.

எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களுடன் (150-க்கு), வேலை வாய்ப்புப் பதிவுக்கு 10 மதிப்பெண்களும் கூடுதல் கல்வித் தகுதியாக பிளஸ் 2-க்கு 2-ம், பட்டப்படிப்புக்கு 3 மதிப்பெண்களும் ஆய்வக உதவியாளர் அனுபவச் சான்று இருந்தால் 2 மதிப்பெண்களும் வழங்கப்படும். இதனையடுத்து, இனசுழற்சி இடஒதுக்கீட்டின்படி தேர்வு செய்யப்பட்டு, அடுத்த ஒரு வாரத்தில் பணி ஆணை வழங்கப்படும்.

இந்த நியமனம் உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில், வெளியிடப்பட்ட அரசாணைப்படி நேர்மையாக நடைபெறும். மேலும், 600 உடற்கல்வி ஆசிரியர்கள், 300 ஓவிய ஆசிரியர்கள், இசை ஆசிரியர்கள் 100, தையல் ஆசிரியர்கள் 100 பணியிடங்கள் விரைவில் நிரப்பப்பட உள்ளன என்றார்.

**சரியான வினாக்கள்தான்:** பிளஸ் 2 கணிதத் தேர்வில், பாடத் திட்டத்தில் இல்லாத கடினமான வினாக்கள் கேட்கப்பட்டது குறித்த கேள்விக்கு, பாடத் திட்டத்திலிருந்துதான் சரியாகக் கேட்கப்பட்டுள்ளது என்றார் ச.கண்ணப்பன்.

பத்தாம் வகுப்பு சமூக அறிவியல் பாடத்தில் தற்போது நடைமுறையில் இல்லாத திட்டக் குழு தொடர்பான வினா இடம் பெற்றது குறித்த கேள்விக்கு, திட்டக் குழுவின் தலைவர் யார் என்று, பொதுவானதாக சரியாகவே கேட்கப்பட்டுள்ளது. திட்டக் குழுவுக்கு பதிலாக நடைமுறையில் உள்ள நிதி ஆயோக்கின் தலைவரும் பிரதமர் தான், அதனால், வினாவில் தவறில்லை என்றார்.

தினமணி Thu, 30 March 2017
epaper.dinamani.com/c/17911935

TAMILNADU AGRO TRAINING CENTRE
An ISO 9001:2008 Certified Training Centre
108, Sholinghur Road,
PALLIPAT-631207
Tiruvallur Dist., (T.N.)

Scanned by CamScanner

தினகரன் e-paper
August 4, 2014

## அனைவருக்கும் கல்வி இயக்க திட்டத்தின் கீழ்

# 15 ஆயிரம் பகுதிநேர ஆசிரியர்களுக்கு ₹2 ஆயிரம் சம்பளம் உயர்க்க முடிவு

வேலூர், ஆக.4: தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகளில் அனைவருக்கும் கல்வி இயக்க திட்டத்தின் கீழ் ₹5 ஆயிரம் தொகுப்பூதியத்தில் தையல், ஓவியம், உடற்கல்வி, கைத்தறி, இசை, கணினி உட்பட பாடங்களுக்கு கடந்த 2011ம் ஆண்டு பகுதி நேர ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களுக்கு வாரம் மூன்று அரைநாட்கள் மட்டும் பணியாற்ற அனுமதிக்கப்படுகின்றனர்.




இந்நிலையில், தங்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தை உயர்த்தி வழங்க வேண்டும். தேர்வு கால விடுமுறையையும் கணக்கில் கொண்டு சம்பளம் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில், கடந்த ஏப்ரல் முதல் தேதி முதல் கணக்கிட்டு மேற்கண்ட பகுதி நேர ஆசிரியர்களுக்கு அவர்கள் வாங்கும் ₹5 ஆயிரம் சம்பளத்துடன் ₹2 ஆயிரம் சேர்த்து ₹7 ஆயிரமாக வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக பள்ளிக் கல்வித்துறையை சேர்ந்த அதிகாரிகளிடம் கேட்டபோது, இந்தியாவிலேயே கல்வித்துறையில் சிறப்பாக செயல்படுவதால் தமிழகத்துக்கு, மத்திய அரசு அனைவருக்கும் கல்வித்திட்டம், அனைவருக்கும் இடைநிலைக்கல்வித் திட்டம் ஆகிய திட்டங்களுக்காக 2014-15ம் ஆண்டுக்கு ₹2 ஆயிரத்து 400 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.

அதன்படி, அனைவருக்கும் இடைநிலை கல்வித் திட்டத்துக்கு ₹400 கோடியை ஒதுக்கியுள்ளது. இதில், 12 ஆயிரம் ஆசிரியர்களின் சம்பளத்துக்கு ₹288 கோடியும், ஆசிரியர்களுக்கு திறன்மேம்பாட்டு பயிற்சி உட்பட பல்வேறு பயிற்சிகளை வழங்க ₹5 கோடி, பள்ளிகளில் உள்ள ஆய்வகங்கள், நூலகங்களுக்கு தேவையான பொருட்களை வாங்க ₹28 கோடி, பிற உள்கட்டமைப்பு வசதிகளுக்கு ₹99 கோடி என அடங்கும்.

அதேபோல் அனைவருக்கும் கல்வி இயக்கத்திட்டத்துக்கு ₹2 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஆசிரியர்கள் சம்பளத்துக்கு ₹900 கோடியும், புதிய தொடக்கப்பள்ளிகள், ஏற்கனவே உள்ள தொடக்க நடுநிலைப்பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், கழிவறை, சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். மத்திய அரசு ஒதுக்கியுள்ள இந்த நிதி கடந்த ஆண்டை விட ₹500 கோடி அதிகமாகும்' என்றனர்.

Copyright 2009 all rights reserved

TAMILNADU AGRO TRAINING CENTRE
04 AUG 2014
★ PALLIPAT-631207 ★

TAMILNADU AGRO TRAINING CENTRE
An ISO 9001:2008 Certified Training Centre
108, Sholinghur Road,
PALLIPAT-631207
Tiruvallur Dist., (T.N.)

Scanned by CamScanner